# கோறளைப்பற்று பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டுக்கான வரைபுப் பாதீடு சமர்ப்பித்தல் அமர்வு

## (14.12.2022)

## கூட்டறிக்கை

**காலம்:** 14.12.2022 – புதன் கிழமை, காலை 9.00 மணி

**இடம்:** கோறளைப்பற்று பிரதேச சபையின், சபா மண்டபம்.

**தலைமை:** கௌரவ. தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 48ஆவது சபை அமர்வு, 14.12.2022 புதன் கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் அமர்வில் கலந்து கொண்ட கௌரவ உறுப்பினர்களின் விபரங்கள்.

1. திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் ~ கௌரவ தவிசாளர்
2. திரு. தர்மலிங்கம் யசோதரன் ~ கௌரவ உப தவிசாளர்
3. திரு. சிற்றம்பலம் கிருபாகரன் ~ கௌரவ உறுப்பினர்
4. திரு. காளிக்குட்டி நடராசா ~ கௌரவ உறுப்பினர்
5. ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் ~ கௌரவ உறுப்பினர்
6. ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் ~ கௌரவ உறுப்பினர்
7. ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் ~ கௌரவ உறுப்பினர்
8. திரு. கனகரெட்ணம் கமலநேசன் ~ கௌரவ உறுப்பினர்
9. திரு. பொன்னையா புஸ்பேந்திரன் ~ கௌரவ உறுப்பினர்
10. திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் ~ கௌரவ உறுப்பினர்
11. ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் ~ கௌரவ உறுப்பினர்
12. திரு. கதிரவேலு நல்லரெட்ணம் ~ கௌரவ உறுப்பினர்
13. திரு. குணராசா குணசேகரன் ~ கௌரவ உறுப்பினர்
14. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் ~ கௌரவ உறுப்பினர்
15. திரு. கந்தசாமி பகீரதன் ~ கௌரவ உறுப்பினர்
16. திரு. சாமித்தம்பி மணிசேகர் ~ கௌரவ உறுப்பினர்
17. திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ~ கௌரவ உறுப்பினர
18. திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி ~ கௌரவ உறுப்பினர்
19. திருமதி. பொன்னையா கலைவாணி ~ கௌரவ உறுப்பினர்
20. ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா ~ கௌரவ உறுப்பினர்
21. திரு. சுந்தரம் சுதர்சன் ~ கௌரவ உறுப்பினர்
22. ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் ~ கௌரவ உறுப்பினர்
23. திரு. சண்முகம் கதிரவன் ~ கௌரவ உறுப்பினர்

2023ஆம் ஆண்டுக்கான வரைபுப்பாதீடு சமர்ப்பித்தல் சபை அமர்வானது கௌரவ தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்களின் தலைமையில் சபா மண்டபத்தில் 14.12.2022 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் ஒரு நிமிட இறைவணக்கத்துடன் ஆரம்பமானது.

அமர்விற்கு வருகைதந்த கௌரவ உபதவிசாளர்,கௌரவ உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு தலைமையுரையாற்றினார்.

எமது சபையின் 2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டுக் கொள்கைவிளக்கம் தொடர்பாக எமது கோறளைப்பற்றுப்பிரதேசம் பல்வேறு வளங்களைக் கொண்டிருந்தபோதும் கடந்தகாலங்களில் பல இன்னல்கள் ஏற்பட்டு பல அபிவிருத்திப் பணிகள் இடம்பெறாமல் இருந்ததாகவும்

குறிப்பாக இரண்டு வருடங்கள் கொரேனா தாக்கதினாலும் மற்றும் அதனைத் தொடர்ந்து எரிபொருள் பற்றாக்குறைகாரணமாகவும் எமது பிரதேச சபையின் வளர்ச்சியிலும் ,வருமானத்திலும் பல தாக்கங்கள் ஏற்படுத்தியிருந்தாலும் கொளரவ உறுப்பினர்கள் ,செயலாளர் மற்றும் உத்தியோகத்தரகள் அனைவரும் இணைந்தவகையில் ஓரளவு சபையினை 2022ஆம் ஆண்டு நடாத்தி சென்றதாகவும்

குறிப்பாக வர்த்தக விடயங்கள் பொதுவாகவே பாதிக்கப்பட்டதனால் வருகின்ற வருமானங்கள் குறைவாக இருந்தபோதும் பல சவால்களுக்கு முகம் கொடுத்து எமது சபையினை நடாத்தியிலுந்ததாகவும் அதேபோல் சபையில் கிடைத்த வருமானம் அதுமட்டுமல்லாமல் உலகவங்கி மூல் கிடைத்த வருமானங்கள் ஏனைய நிதி நிறுவனங்கள் பொது தொண்டார்வ நிறுவனங்களும் எமது சபைக்கு பங்களிப்பினை செய்து பல்வேறு விதமான நிகழ்ச்சித்திட்ங்களை முன்னெடுத்து எமது அலுவலக முகப்பு என்பவற்றில் மாற்றங்டகள் மேற்கொண்டு தேவையான சேவைகளை செவ்வனே நிறைவேற்றியிருந்ததாகவும்

அதன் அடிப்படையில் இதற்கு ஒத்துழைப்புவழங்கிய அனைவருக்கும் முதலில் நன்றிகளைக் கூறிக்கொண்டு 2023ஆம் ஆண்டுக்கான அடிப்படைத்டதேவைகளை பூர்த்திசெய்யும் பொருட்டு பிரதேச சபைக்கான பாதீட்டினை சமர்ப்பிக்கலாம் என நினைப்பதாகவும் தெரிவித்ததுடன் ,அனைவருக்கும் 2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டு வரைபுப் புத்தகம் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அதனடிப்படையில் 2023ஆம் ஆண்டிற்கு எதிர்பார்கின்ற வருமானங்களாக வீத வரிகள் வாடகை , உரிமங்கள் , சேவைகளுக்கான கட்டணம் குற்றப்பணம் ,தண்டப்பணம் ஏனைய வருமானங்களாக அரசிறை வருமானங்களைச் சேர்த்து 2023ஆம் ஆண்டுக்கான மொத்தவருமானங்களாக 13,20,58000.00 ரூபாய் அதேபோல் நடமுறை செலவீனங்களாக எரிபொருளுக்கான செலவு மற்றும் பதிலீட்டுத் தொழிலாளருக்கான சம்பளம் என்பன பாரிய செலவாகக் காணப்படுவதாகவும்

அதைத்தவிர ஏனைய வழமையான செலவுகள் அதாவது எதிர்பார்க்கின்ற செலவுகளாக 11,43,05000.00 ரூபாய் அத்துடன் வருகின்ற வருமானத்திலிருந்து செலவுகளை கழிக்கும் சந்தர்ப்பத்தில் 1,77,53,000.00 ரூபாய் மீதமாக இருக்கும் அவ் மீத வருமானத்தினை மூலதனச் செலவுக்காக ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் மேலும் 1,12,00000.00 ரூபாய் PSD , CBG வேலைத்திட்டம் மற்றும் மாகாணசபையில் இருந்து வருகின்ற வேலைத்திட்டங்கள் ஊடாக எதிர்பாார்ப்பதாகவும் ,

அதனைத்தவிர கடந்த பாதீட்டிலிருந்து நிதிக்குழுவினருடனும் பொது அமைப்புக்களுடனும் கலந்துரையாடியதன் மூலம் கௌரவ உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் இம்முறை எங்கள் பிரதேசத்தின் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கும் அதேபோல் மளிர் ,மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கான நிதியினையும் சற்று அதிகமாக ஒதுக்கீடு செய்வதுடன் வாழ்வாதார திட்டங்களை

அதாவது ஒருங்கிணைந்த பண்ணை நடவடிக்கைகளை மக்களை இணைத்துக் கொண்டு ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் திட்டங்களை மேற்கொண்டு சமர்பிக்கப்பட்டுள்ளதாகவும் ,

ஆதே போன்று எமது சபைக்கு அதிகமான வருமானங்களை பெற்றுக்கொள்வது நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத் தீர்ரை மூலம் பெற்றுக்கொள்வதாகவும் அந்தளவான வருமானமும் தற்போதைய ஏரிபொருள் ஏற்றத்தினால் போதாமையாகவுள்ளதாகவும் அதேபொன்று சபையின் தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்ட சோலைவரியினை சிறிதளவு அறவீடு செய்து அறவீடு செய்கின்ற பிரதேசத்திற்கே அதனை செலவு செய்யலாம் எனவும் அத்துடன் சோலை வரியினை அறவீடு செய்ய தொடங்கினால் சபைக்கு பாரியளவிலான வருமானத்தினை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அதனடிப்படையில் வருகின்ற வருடம் அதனையும் அமுல்படுத்துவதற்கு எதிர்பாத்திருப்பதாகவும் அதனை நடமுறைக்கு கொண்டுவராததனால் பாதீட்டு வரைவுப் புத்தகத்தில் குறிப்பிடவில்லை எனவும் அதனையும் அறவீடு செய்வோமாக இருந்தால் அதன் மூலம் பெறப்படுகின்ற வருமானத்தினை கொண்டு மக்களுக்கான சேவையினை வழங்கமுடியும் என நினைப்பதாகவும்

அத்துடன் வரவு செலவுத்திட்டத்தில் ஏதாவது திருத்தங்கள் இருப்பின் அதனையும் சுட்டிக்காட்டுமாறும் கேட்டுக்கொண்டு தனது பாதீட்டு விளக்க உரையினை நிறைவு செய்தார் .

அதனைத்தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள் என்னிடம் வழங்கப்பட்டுள்ள வரவு செயவுத்திட்ட வரைவில் சரிபார்த்தவர் ஒப்பமிட்டுள்ளார் தயாரித்தவர் ஒப்பமிடவில்லை எனவும் தயாரித்தவர் ஒப்பமிடாமல் இவ் வரவு செலவுத்திட்டத்தினை நான் ஏற்றுக்கொள்ள முடியும் என கேள்வி எழுப்பியதுடன், கௌரவ உறுப்பினர்களிடம் முன்மொழிவு கேட்டதாகவும் இங்கு வழங்கப்பட்ட முன்மொழிவுகள் இணைக்கப்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பினார் அத்துடன் பிரதேச சபை நிதி ஊடாக எங்களுக்கு எவ்வித நிதியும் ஒதுக்கவில்லை எனவும் உலகவங்கியினால் ஒதுக்கப்பட்ட நிதியிலும் ஒதுக்கப்படவில்லை எனவும் கறுவாக்கேணி பகுதியில் முத்தமிழ் வீதி என அழைக்கப்படும் வீதிக்கு வீதி போட வேண்டும் என கோரியிருந்ததாகவும் ஆனால் செம்மனேடை வட்டார உறுப்பினருக்கு நிதி ஒதுக்கீடு செய்து ஹாயியார் வீதி என பெயர் சூட்டியதாகவும் என தெரிவித்ததுடன் பிரதேச சபை நிதியிலிருந்து எனது வட்டாரத்துக்கு எவ்வித நிதி ஒதுக்கீடுதம் செய்யப்படவில்லை எனவும் ஆனால் 17 லோட் கிறவல் மாத்திரம வழங்கப்பட்டதாகவும் அதைத்தவிர வேறு அபிவிருத்தி தனது வட்டாரத்தில் இடம் பெற வில்லை என தெரிவித்தார் .

அதற்குப்பதிலளித்த கௌரவத் தவிசாளர் அவர்கள் இது வரைவு வரவு செலவுத்திட்டம் எனவும் அங்கீகரித்த பிற்பாடு திருத்தப்பட்ட புத்தகத்தில் கையொப்பம் இட்டுத்தருவதாக கணக்குப்பகுதிக்கு பொறுப்பான உத்தியோகத்தர் குறிப்பிட்டதாகத் தெரிவித்தார் .

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன் அவர்கள் அச்சபையானது 2018 ஆண்டு தொடக்கம் இன்று வரை முன்னோடியாக மக்களுக்கு சேவைகளை வழங்கி வரும் நோக்கத்துடன் நடந்து வருவதாகவும் அந்தவேளையில் சேவைகள் செய்துருக்கோம் என்றால் கேள்விக்குறி மாத்திரம் தான் எங்கள் மத்தியில் உறுப்பினராக எஞ்சியிருப்பதாகவும தொடற்சியாக மக்கள் பிரச்சனைகளை சபை ஊடாக முன்வைத்திருந்ததாகவும் அதில் எத்தனை பிரச்சினை தீர்க்கப்பட்டிருந்தால் பூச்சியல்தான் முடியும் எனவும் 2023ஆம் ஆண்டு பாதீடானது தவிசாளாரால் இன்று சமர்பிக்கப்பட்டிருப்பதாகவும் பாதீட்டின் ஊடாக மக்கள் நலன் பெறவேண்டும் என்பதில் எந்த ஐயமும் இல்லை எனவும் அதே வேளையில் இப் பாதீட்டினை எதிர்பதா ஆதரிப்பதா என்பது ஆனைவருக்கும் தனி உரிமை உள்ளது எனவும் எமது பிரதேச நலம் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் பல குறைபாடுகளுடன் இச்

சபை நடைபெறுவதாகவும் சமூகத்தையும் , கலாச்சாரத்தையும் பாதுகாப்பதில் அங்கு 100க்கு 10 வீதம் மாத்திரமே நடைபெற்றுள்ளதாகவும்

இச்சபை ஒருபோதும் மிரட்டல்களுக்கோ பலவேறு அச்சுறுத்தல்களுக்கோ இல்ஞ்சங்களுக்கோ நடைபெறாது எனவும் அதற்கு தான் இடமளிக்கப்போவதில்லை எனவும் தான் எப்பொழுதும் ஒரு ரூபாய் ஏனும் இலஞ்சமாகப் பெவில்லை எனவும்

இன்று தவிசாளரின் நிலை மரத்தில் விழுந்தவனை மாடு குத்தியது போல் உள்ளது எனவும் அந்த வகையில் நான் ஒரு தமிழன் எனவும் எந்த வொரு இனத்துக்கும் எதிராவனும் அல்ல எனவும் கிண்ணியடி வட்டார உறுப்பினர் எனவும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ரீதியா இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ள போவதில்லை என தெரிவித்துக் கொள்ளபோவதில்லை எனவும் எனது பிரதேசத்தை வழிநடத்தக் கூடிய பிரதேச செயலாளாருக்கு இது சாதகமாக இருக்கவேண்டும் எனவும் எமது பிரதேசத்தின் மக்கள் நலம் சார்ந்து இனம் சார்ந்து இவ் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளப்போவதில்லை என கூறிக்கொண்டு காலை 10.10 மணியளவில் சபையினை விட்டு வெளியேறினார் .

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா அவர்கள் சபையானது 5 வருடங்களை பூர்த்தி செய்துள்ளதாகவும் ஆனால் ஏனை சபைகளில் பெண்களுக்கான வேலைத்திட்டங்களை செய்து வருவதாகவும் ஆனால் இதுவரைகாலமும் இங்கு பெணகளுக்கான ஒதுக்கீடு ஒதுக்கப்படவில்லை எனவும் மளகிர் மற்றும் மாற்றுத்திறநாளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது சரியானது எனவும் ஆனால் 05 பெண் உறுப்பினர்களுக்கு என்ன வேலை திட்டத்தை இதுவரையில் செய்தோம் என கேள்வி எழுப்பியதுடன் இந்த பாதீட்டியளலாவது திருதத்ததில்பெண்களுக்கான ஒதுக்கீட்டினை கொண்டுவருமாறு கேட்டுக் கொண்டார் .

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் அவர்கள் மக்ளனால் ஆளப்படுகின்ற சபை என நினைத்து எதிர்பாப்புடன் மக்கள் வாக்களித்திருந்தனர் எனவும் வாக்களித்ததன் நிமித்தம்' உறுப்பினர்கள் இங்கு வந்து சேவைகளை செய்யலாம் என இங்கு வந்திருந்ததாகவும்

தன்னை பொறுத்வரை 2021ஆம் ஆண்டுக்குப் பிறகு இது சட்டவிரோத சபையாக இயங்கிவருவதாகவும் ஆதரவளிக்கும் உறுப்பினர்கள் தவிர ஏனையவர்கள் அனைத்து விடயங்களிலும் பழிவாங்கப்பட்டதாகவே இருந்தது எனவும் அதனையும் பொருட்படுத்தாமல் மக்கள் நலம் சார்ந் விடயங்களுக்கு பூரண ஆதரவினை வழங்கியிருந்ததாகவும் எந்த விடயத்திலும் தங்களுடைய கருத்துக்கள் உள்வாங்கப்படுவதில்லை எனவும்

இங்கு பல முறைகேடான விடயங்கள் நடந்திருப்பதாகவும் இவ் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான நிலைப்பாட்டினை நாம் எடுக்கின்றோம் என்பதனை வியாக்கியானப்படுத்தவேண்டிய தோவை தங்களுக்கு இருப்பதாகவும் யார் எதிர்த்தாலும் ஆதரித்தாலும் எங்களுடைய நிலைப்பாடு எங்களுடைய நிலைப்பாடாகத்தான் இருக்கும் எனவும் இதை வெளியில் கொண்டு சுய அரசியலுக்காகவும் சுய தேவைக்காகவும் யாரும் இதைப் பயன்படுத்தக் கூடாது எனவும்

உங்களுடைய மனாட்சாட்சியைத் தொட்டு சொல்ல வேண்டும் சபை வந்த காலத்தில் இருந்து என்ன செய்துள்ளீர்கள் என்று. ஆனால் திமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நியாயமாக நடந்ததாகவும் தெரிவித்ததுடன் , கௌரவ உறுப்பினர் திரு. குணராசா குணசேகரன் அவர்கள் கூறியதைப் போன்று எந்த ஊழலும் எங்களிடம் இல்லை எனவும் மக்களை கவலைப்படுத்தும் விதமாக கொள்ளையடிக்கவும் இல்லை அதற்கு ஆசைப்படவும் இல்லை எனவும் உள்ளூராட்சி ஆணையாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தினையும் கருத்தில் கொள்ளாமல் இச் சபை அரசியற்பலத்தினை கொண்டுதான் நடைபெற்று வருவதாகவும் அரசியற்

தேவைக்காக 2019ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணை நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளதாகவும் தெரிவித்ததுடன் இப்பாதிடு உறுப்பினர்களின் ஆலோசனை கூட பெறப்படாமல் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டதை போன்று உறுப்பினர்களின் முன்மொழவுகள் இணைக்கப்படவில்லை எனவும் தெரிவித்ததுடன் இது எங்களுடைய தீர்மானம் எனவும் யாருடனும் இணைத்து குறிப்பிடத் தேவையஜல்லை என தனது கருத்தினைப் பதிவு செய்தார் .

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் அவர்கள் பாதீடு என்பது வருகின்ற வருடத்திற்குரிய வேலைத்திட்டங்கள் ஏனைய சேவைகளை நடாத்திச் செல்வதற்கான சபைக்கு கிடைக்கின்ற வருமானத்தினை வைத்து தயாரிக்கப்படுகின்ற விடயம் தான் பாதீடு எனவும் கடந்தகாலங்களில் தயாரிக்கப்பட்டபாதீட்டின் ஊடாக எனது வட்டாரத்தில் நான் அறிந்த வகையில் எந்தவொரு வேலைத்திட்டங்களும் நடைபெறவில்லை எனவும் கடந்தகாலத்தில் பிரதி அமைச்சர் அவர்களின் வேலைத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாகத்தான் மின்குமிழ்களும் கிடைக்கப்பெற்றது எனவும் , சபையை நடாத்தி செல்வதற்கு தவிசாளருக்கு ஆதரவு வழங்குபவர்களுக்கு மாத்திரம் தான் வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டதாகவும்

பிரதேச சபைகளில் ஆளும் கட்சி எதிர்க்கற்சி என்று இல்லாமல் அனைதது உறுப்பினர்களும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் என்பதுடன் வேலைத்திட்டங்கள் அனைத்தும் சமனான முறையில் நடைபெற வேண்டும் என வட்டார தேர்தல் முறை ஆரம்பிக்கும் முதல் அரசாங்கம் மிகத் தெளிவாகக் கூறியிருந்ததாகவும் ஆனால் இங்கு அதற்கு மாறாக தங்களுக்கு வேண்டபட்டவார்களுக்குமாதத்திர் வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்ததுடன் .

வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி சசரி சமமான முறையில் பங்கிடப்படவில்லை எனவும் அரசாங்கத்தினால் கிறவல் வீதிகள் இடுவதனை நிறுத்தக்கோரியும் கூட கிறவலுக்கான அதிகமான நிதி எமது சபையில் மாத்திரம்தான் செலவிடப்பட்டதாகவும் 20,00000.00 ரூபாய் கிறவலுக்காக ஒதுக்கப்பட்டதாகவும் அவ் நிதியின் ஊடாக வாழைச்சேனை தொடக்கம் கும்புறு மூலை வரை இடலாம் என விபரம் தெரிந்த ஒருபர் தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்ததுடன,

இது மக்களுடைய பணம் எனவும் செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் மக்களுக்காக செய்யப்பட்டிருக்குமானால் அதனை வரவேற்பதாகவும் ஆனால் தங்களுக்கு ஆதரவு வழங்குபவர்களுக்குச் சார்பாக கேட்கின்ற போதெல்லாம் நிதி பகீரப்பட்டதாகவும நீதிமன்றத்தை அண்மித்த வீதி ஒன்று புனரமைப்புச் செய்யப்பட்டிதாகவும் மழைகாலங்களில் அவ் வீதியினை மக்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் இருப்பதாகவும் அந்த அளவிற்கு அவ் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்ததுடன்

ஏன் அவ் வீதியினை சரியான முறையில் செய்யவில்லை எனவும் தொழில் நுட்ப அதிகாரிகள் எதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என கேள்வி எழுப்பினார் . பொலிஸ் சந்தி தொடக்கம் சாவ நாட்டு சந்தி என அழைக்கின்ற பிரதேசத்தில் அரச திணைக்களங்கள் காணப்படும் பிரதேசத்திசமாகும் அப் பிரதேசத்தில் இன்று வரைக்கும் ஒரு மின் குமிழ் கூட பொருத்தப்படவில்லை எனவும் இச் சபை மக்களுக்குரிய சபை எனவும் இவ் வளங்கள் மக்களுக்காக பயன்படுத்தப்படவேண்டும் எனவும் மக்களுக்காக வேண்டியும் மின்குழ்களை இடுவதற்கு நீங்கள் தயாரில்லை எனவும் ரயில் கடவை உள்ள இடத்தில் இரவு நேரங்களில் இருண்ட பிரதேச மாகக்காணப்படுவதினால் அதற்கு ஒரு மின் குமிழினைப் பொருத்துமாறு கோரியும் இன்னும் அது பொருத்தப்படவில்லை எனவும் கடந்தகாலங்களில் எங்களைப் புரிந்து கொள்ளாமல் நாங்கள் சமூகத்துக்காகக் கொண்டுவருகின்ற முன்னெடுப்புக்களே தவிர தனிப்பட்ட இலாபத்திற்காக ஒரு பிரேரணையாகக் கூட உங்களிடம் கொண்டுவரவில்லை எனவும் அத்தனை வருடகாலத்தில் கொண்டு

வரப்பட்ட பதீடுகள் செயல்வடிவம் பெற்றதா என பார்க்கும் பொழுது கேள்விக்குறியாகத்தான் சபையில் இருந்து வருவதாகவும்

அத்துடன் செம்மணோடைச்ச சந்தை யினை இரண்டாவது நபர் விலைமனு கோரியிருந்தும் 3,10,000.00 ரூபாய்க் கோரியவருக்கு வழங்கியிருப்பது அதுதான் நியாயம் ஆனால் பாதீட்டில் பார்கின்ற பொழுது வெறும் 78,000.00 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருப்பதாகவும் 2022ஆம் ஆண்டுக்கு 3,10,000.00 ரூபாய்க்கு விலை மனு கோரியிருந்தும் 78,000.00 ரூபாயாகக எவ்வாறு குறைப்பீர்கள் என கேள்வி எழுப்பினார் .அதனுடைய பணத்தை யார் பெற்றுக்கொண்டது இதற்கு யார் பதில் சொல்வது. விலைக்குறைப்புக்குரிய அதிகரம் யார் தந்தது என கேள்வி எழுப்பினார்

மற்றவர்களைத் திருப்தி படுத்துவதற்காக சபையினுடைய வருமானத்தினை ஊதசீனம் செய்ததாகவும் மக்களுக்கு பயன்படுத்தவேண்டிய வருமானத்தை இல்லாமல் செய்ததாகவும் தெரிவித்ததுடன் சபை நிதி மக்களுக்கு ஒழுங்காக சென்றடைய வில்லை எனவும் உங்களுக்கு ஆதரவு வழங்கிய உறுப்பினர்களைத்ட திருப்தி படுத்துவதற்காக வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்ததுடன் இனி சமர்பிக்கப்படும்ட பாதீடு செயல் வடிவம் பெறுவதாக இருந்தால் மாத்திரமே சமர்பிக்கபட வேண்டுமேற தவிர கண்துடைப்புக்காக சமர்பிக்காமல் உண்மைக்கு உண்மையாக செயற்படுத்தக் கூடிய பாதீட்டினை சமர்பித்து அங்கீகாரத்தினை பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்வதாகத் தனது கருத்தினைப் பதிவு செய்தார்.

அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் அவர்கள் அப் பிரதேச சபையானது 03 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய பிரதேசமாகும் எனவும் கடந்த காலத்தில் கோறளைப்பற்று பிரதேச சபையினூடாக எனது வட்டாரத்தில் அதாவது கோறளைப்பற்று பிரதேச சபையில் அதி கூடிய மணல் வீதிகளைக் கொண்ட பிரதேசமாக இருந்தால் அது கொண்டயங்கேணி செம்மனோடைப் பிரதேசமாகவே இருக்கும் எனவும்

அதிகளவான கிறவல்களளை அவ் வீதிகளுக்கு வழங்கினால் கூட போதாத நிலை காணப்படுவதாகவும் செம்மனோடை வட்டாரத்தில் செம்மனோடை மக்கள் மாத்திரம் வசிக்க வில்லை எனவும் ஏனைய பிரதேச மக்களும் வசிப்பதாகவும் , அங்கு அமைப்புச்சார்ந்த வேலைத் திட்டங்கள் இடம்பெறவில்லை எனவும் கொண்டையன் கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளி வசலிலுக்கு ஒன்றியம் இருப்பதாகவும் 1.5 Km வீதிகள் இன்றுவரைக்கும் மணல் வீதிகளாக இருப்பதாகவும் அதில் மாற்று திறனாளிகள் மற்றும் கற்பிணிதாய்மார்களை கொண்டு செல்ல முடியாத நிலை காணப்பட்ட வீதிகளை கிறவல் வீதிகளாக மாற்றியுள்ளதாகவும் இதனை பள்ளிவாசல் அமைப்புக்களின் வேண்டுகேளுக்கிணங்கவே இவ் வேலைத்திட்டங்களை செய்ததாக தெரிவித்ததுடன்

செம்மனோடை மாவடிச்சேனைப் பிரதேசத்தில் குறிப்பாக மாவடிச் சேனை பிரதேசத்தில் சில வேலைத்திட்டங்கள் செய்யப்படவில்லை எனும் குறை இவ்விடத்தில் கூறப்பட்டதாகவும் கடந்த பாதீடு பொதுவாகப் போடப்பட்ரெுந்தாலும் எங்களுடைய பள்ளிவாசல் மற்றும் அமைப்புக்களின் வேண்டு கோளுக்கிணங்கவும் எங்களுடைய பரிந்துரைக்கு அமையவும் மாவடிச்சேனையின் பிரதான வீதியில் பார்க்கமுடியும் எனவும்.

பள்ளிவாசலுக்கு முன்பாகப் பொருத்தப்பட்ட LED மின்குமிழகள் ' கோறளைப்பற்று பிரதேச சபையினூடாகப் போடப்பட்டிருந்தது அதே போன்று மாவடிச்சேனை பாடசாலைக்கு அடுத்தாதக பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் கோறளைப்பற்று பிரதேச சபையினால் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் எனவும் அகமது

ஹியாஜ் வீதி, இலங்கை வங்கி முன்பாக வுள்ள வீதி பொருத்தப்பட்டுள்ள மின்விளக்ககள் கோறளைப்பற்று பிரதேச சபையினால் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் எனவும் பேரதேச சபையினால் எவ்வாட்டாரத்திற்கு வேலைகள் இடம்பெற்றிருக்கின்றதோ தெரியவில்லை எனவும்

ஆனால் தனது வட்டாரத்திற்கு வேலைகள் இடம்பெற்றிருப்பதாக தெரிவித்தார் அத்துடன் அவனிதாஸ் வீதி எமது சபையினால் போடப்பட்ட வீதி எனவும் அவுலக்ஸா வீதி யானது ஒட்டுமொத்த மாவடிச்சேனை பள்ளி வாசல் கள மாத்திரமல்லாது மக்ஸா பள்ளிவாசல் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கம் போன்றவற்ளின் கடிதங்களை கொண்டுதான இவ் வீதி எமது சபையினால் போடப்பட்டது என்பது பதிவில் இருப்பதாகவும்

கோறளைப்பற்று பிரதேச சபையிலே வீதிகளுக்கான வீதி மின் விளக்ககள் அதே போன்று எமது பிர தேசம் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பிரதேசம் என்ற வகையிலே எப் பிரதேச சபை செய்யாத வேலைத்திட்டத்தை இப் பிரதேச சபை செய்தது எனவும் கொரோண காலங்கள் எங்களது மக்கள் பசி பட்டிகியாக இருந்தபொழுது அனைத்து உறுப்பினர்களின் வேண்டு கோளுக்கிணங்க ஒரு வட்டாரத்திற் 100 உலர் உணவுப் பொதி என்ற நிர்ணயித்த தொகையினை விட எனது பிரதேசத்திற்கு மாத்திரம் 200 உலர் உணவுப் பொதியினை பிரதேச சபையினால் வழங்கியிலருந்ததாகவும் அதனை மக்களுக்கு வழங்கியதாகவும் தெரிவித்ததுடன்

கோறளைப்பற்று பிரதேசத்திலே எங்களுடைய பிரதேசத்தில்தான் அப்படிப்பட்ட வேலைகள் நடைபெற்றிருப்பதாகவும் எங்களுடைய பிரதேச மக்களின் நலனுக்காகவே இவ் வேலைத்திட்டத்தினை செய்ததாகவும் மேலும் எனது வட்டாரத்தில் அமைந்துள்ள வாராந்த சந்தையினை இன நல்லுறவுக்காக அனைத்து கௌரவ உறுப்பினர்களின் ஆதரவுடனும் கொண்டுவந்து அனைத்து மத மக்களும் நல்லுறவு கொண்டாடக் கூடிய ஒரு வாராந்த சந்தையாக உள்ளது எனவும LDSP வேலைதிட்டத்தின் ஊடாகவும் எங்களது பிரதேசத்திற்கு வேலைகள் இடம்பெற்றுள்ளது எனவும் கோறளைப்பற்று பிரதேச சபை அபிவிருத்தியில் எங்களது வட்டாத்தினை புறக்கணிக்கவில்லை என தனது கருத்தினை பதிவு செய்தார்.

அதனைத் தொடந்து உரையாற்றிய கௌரவ தவிசாளர் அவர்கள் அடிமட்டத் தொகை அனைத்து குத்தகையிலும் மார்க போனவருடத்தினை விட இத்தவருடம் போடப்படும் எனவும் யாரும் எவ்வளவு வேண்டுமானாலும் தங்களுக்கு விரும்பிய தொகையினை கோரலாம் எனவும் இவ்வருடம் ஒருவர் 700000.00ரூபாய்க்கு கேரியுள்ளதாகவும் தெரிவித்ததுடன் நாங்கள் கோருகிற தொவைகயை விட அதிக தொகை கோருவது உங்களுடைய விருப்பம் எனவும் அடிமட்ட தொகைதான் சபையால் தீர்மானிப்பது எனவும நீங்கள் எவ்வளவும் தொகையும் கேட்கலாம் எனவும் அவர்கள் அதிகமான தொகையினை பொடுவதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல என தெிவித்தார்

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர்களால் 2023ஆம் ஆண்டுக்கா வரைபுப் பாதீட்டினை கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் முன் மொழிந்ததுடன அதனை் கௌரவ உறுப்பினர் திரு. சாமித்தம்பி மணிசேகர் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டுக்கான பாதீடு பகீரங்க வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் ஆதரவாக பின்வரும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 10 கௌரவ உறுப்பினர்கள் வாக்களித்ததுடன்

| இல | பெயர் | பதவி | ஆம் | இல்லை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் | தவிசாளர் | √ | | |
| 02 | திரு. தர்மலிங்கம் யசோதரன் | உப தவிசாளர் | √ | | |
| 03 | திரு. காளிக்குட்டி நடராசா | உறுப்பினர் | √ | | |
| 04 | திரு. சிற்றம்பலம் கிருபாகரன் | உறுப்பினர் | √ | | |
| 05 | திரு. பொன்னையா புஸ்பேந்திரன் | உறுப்பினர் | √ | | |
| 06 | திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் | உறுப்பினர் | √ | | |
| 07 | திரு. சாமித்தம்பி மணிசேகர் | உறுப்பினர் | √ | | |
| 08 | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | உறுப்பினர் | √ | | |
| 09 | திரு. சுந்தரம் சுதர்சன் | உறுப்பினர் | √ | | |
| 10 | திரு. சண்முகம் கதிரவன் | | √ | | |
| | மொத்தம் | | 10 | | |

2023ஆம் ஆண்டுக்கான வரைபுப் பாதீட்டிற்கு எதிராக பின்வரும் பெயர் குறிப்பிடப்படும் 12 கௌரவ உறுப்பினர்கள வாக்களித்ததுடன்

| இல | பெயர் | பதவி | ஆம் | இல்லை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | ஜனாப். முஹம்மது புஹாரி முஹம்மது வாசுதீன் | உறுப்பினர் | | √ | |
| 02 | ஜனாப் சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் | உறுப்பினர் | | √ | |
| 03 | ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | உறுப்பினர் | | √ | |
| 04 | திரு. கனகரெட்ணம் கமலநேசன் | உறுப்பினர் | | √ | |
| 05 | ஜனாப் ஆதம்லெப்பை அப்துல் கபூர் | உறுப்பினர் | | √ | |
| 06 | திரு. கதிரவேலு நல்லரெட்ணம் | உறுப்பினர் | | √ | |
| 07 | திரு. கந்தசாமி பகீரதன் | உறுப்பினர் | | √ | |
| 08 | திரு. கிருஷ்ணப்பிள்ளை சேயோன் | உறுப்பினர் | | √ | |
| 09 | திருமதி. பொன்னையா கலைவாணி | உறுப்பினர் | | √ | |
| 10 | திருமதி. கந்தசாமி ரஞ்சிதமலர் | உறுப்பினர் | | √ | |
| 11 | ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா | உறுப்பினர் | | √ | |
| 12 | ஜனாப். காமிது லெப்பை இப்றாஹிம் | உறுப்பினர் | | √ | |
| | மொத்தம் | | | 12 | |

2023ஆம் ஆண்டுக்கான வரைபுப் பாதீட்டில் பின்வரும் ஒரு கௌரவ உறுப்பினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்புச் செய்தார்

| இல | பெயர் | பதவி | ஆம் | இல்லை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | **திரு. குணராசா குணசேகரன்** | உறுப்பினர் | | | வெளிநடப்பு |

**2023ஆம் ஆண்டுக்கான வரைபுப் பாதீடானது 02 மேலதிக வாக்குகளால் அங்கீகரிக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டது**

**இறுதியாக 2023ஆம் ஆண்டுக்கான வரைபுப் பாதீடு சமர்ப்பித்தல் சபை அமர்வானது காலை 11.30 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

.............................................
**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.